# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

DSP/VBAC

C 8102144

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 02/2025 மு.த.அ. எண் Date: 21.02.2025 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: 1988 as amended by the P.C Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 12.02.2025 at 10.00 hrs 20-02-2025 at 13.13 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.02.2025 Time : நேரம் 07.45 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோ[vil] செயற்பொறியாளர் அலுவலகம், ப[ழனி]
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சுமார் 65 கி.மீ, மேற்கே
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. செந்தில்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. நல்லமுத்து
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2025 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் அரசு ஒப்பந்ததாரர் (g) Address : முகவரி M/s Sony Constructions, 7/131A, சின்னாக்கவுண்[டன்] - வலசு, வாய்க்கால் பாளையம் - வள்ளியரச்சல் கிராமம், - காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பிரேம்குமார், செயற்பொறியாளர், அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 21/2/2025 | [signature] 21/2/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21·02·2025- 11·15 hrs

Name: பெயர் ......V. சேகரன்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர், இணைய குற்றப் பிரிவு ... மற்றும் கண்காணிப்பு ...

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:2/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 21.02.2025-ம் தேதி காலை 07.45 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது செ.செந்தில்குமார், வயது 49/2025, S/o.செல்லமுத்து, M/s Sony Constructions, 7/131A, சின்னாக்கவுண்டன் வலசு, வாய்க்கால் பாளையம், வள்ளியரச்சல் கிராமம், காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று 21.02.2025-ம் தேதி காலை 08.45 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: செ.செந்தில்குமார், வயது 49/2025, S/o.செல்லமுத்து, M/s Sony Constructions, 7/131A, சின்னாக்கவுண்டன் வலசு, வாய்க்கால் பாளையம், வள்ளியரச்சல் கிராமம், காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர்: உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் Sony Constructions என்ற பெயரில் கட்டுமான நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2010ல் பதிவு செய்யப்பட்ட கூட்டாண்மை நிறுவனமாக நானும் எனது தந்தை திரு.செல்லமுத்து அவர்களும் உருவாக்கினோம். அதன் GST பதிவு எண். 33ABSFS7589R1ZQ ஆகும். பொதுப்பணித்துறையில் நான்காம் வகுப்பு ஒப்பந்ததாரராக பதிவு செய்து ரூ.2 கோடி வரையிலான ஒப்பந்தப்பணிகளை செய்து வருகிறேன். அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் பல்வேறு பணிகளை செய்து வருகிறேன். கடந்த 05.08.2022 அன்று பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் உபகோயிலான ஓட்டன்சத்திரம், அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோவிலில் காவடி மண்டபத்தின் முதல் தளத்தில் உள்ள குறிஞ்சி திருமண மண்டபம் கட்டும்பணி மற்றும் தரைத்தளத்தில் உள்ள முத்துக்குமாரர் திருமண மண்டபத்தை மராமத்து செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியானது இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், பழனி அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தப்புள்ளிக்கு நானும் விண்ணப்பம் செய்தேன். எனது ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி ஆணை 07.02.2023 அன்று வழங்கப்பட்டது. அதன் பின்னர் நானும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் இணை

ஆணையர்/செயல் அலுவலர், அவர்களுக்கு பணி செய்வது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றினை 09.03.2023 அன்று ரூ.73,13,795/-க்கு செய்து கொண்டோம். ஒப்பந்தம் செய்த பின்னரும் எனக்கு Site ஒதுக்கீடு செய்து கொடுக்கவில்லை. இந்நிலையில் கடந்த 20.04.2023 அன்று பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்கள் பணிகளை விரைவாக முடித்து 13.09.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தி கடிதம் வழங்கினார். அதற்கு நான் site ஒப்படைப்பு செய்து தராததால் பணிகளை துவக்க முடியவில்லை என்று தெரிவித்தேன். பின்னர் 10.05.2023 அன்று தான் பணிகள் செய்யப்படவேண்டிய site-ஐ ஒப்படைப்பு செய்து கடிதம் வழங்கினார்கள். நானும் ஒப்பந்தப்படி பணிகளை செய்து வந்தேன். எனக்கு ஒதுக்கப்பட்ட ஒப்பந்தப்பணியை 6 மாத காலத்திற்க்குள் முடிக்க அறிவுறுத்தியிருந்தார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் தாமதம் செய்ததால் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தான் அனைத்து வேலைகளையும் முடித்தேன். மேற்கண்ட ஒப்பந்தப்பணியை செய்து வரும் போது ரூ.9 லட்சம் ஒரு முறையும், ரூ.13 லட்சம் ஒரு முறையும் என ரூ.22 லட்சம் Part bill வழங்கினார்கள். அதையுமே மிகவும் காலதாமதப்படுத்தி வழங்கினார்கள். பின்னர் final bill தொடர்பாக கடந்த 22.01.2025 அன்று காலை சுமார் 10.45 மணிஅளவில் என்னுடைய Mobile எண் 9025777888 லிருந்து EE திரு.பிரேம்குமார் அவர்களை அவரது மொபைல் எண்.8668157025க்கு அழைத்து இன்னும் final bill முடிக்கவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் JE திரு.முத்துராஜ் அவர்களிடம் தெரிவித்து சீக்கிரம் bill தயார் செய்ய சொல்வதாக தெரிவித்தார். அதன் பின்னர் கடந்த 12.02.2025 அன்று காலை சுமார் 10 மணியளவில் என்னுடைய மொபைலில் இருந்து EE திரு.பிரேம்குமார் அவர்களை அழைத்து இன்னும் final தயார் செய்யவில்லை என்றும், சீக்கிரம் final பில் தயார் செய்து பணம் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டேன். அதற்கு அவர் JE முத்துராஜ் அவர்களிடம் பேசி உடனே பில் தயார் செய்து அனுப்ப சொல்வதாகவும், final பில் பாஸ் செய்யவேண்டும் என்றால் பில் தொகையில் 1% லஞ்சமாக கொடுக்கவேண்டியிருக்கும் என்றும், பில் தயார் செய்தவுடன் அவரை வந்து சந்திக்குமாறும் தெரிவித்தார். கடந்த 18.02.2025 அன்று AEE அவர்கள் நான் செய்த மேற்கண்ட ஒப்பந்தப்பணி தொடர்பாக ஒப்பீட்டு அறிக்கையை என்னுடைய Whatsapp எண்.9025777888க்கு அவருடைய Whatsapp எண்.9788681135லிருந்து அனுப்பினார். அதனை பார்த்ததில் மொத்த பணிக்கான Bill

ரூ.48,20,724/- என்றும் ஒப்பந்தம் ஏற்படுத்திய தொகையிலிருந்து ரூ.24,93,071/- ஐ குறைத்தும் இருந்தார்கள். இது தொடர்பாக விளக்கம் கேட்பதற்காக JE முத்துராஜ் அவர்களை 18.02.2025 காலை சுமார் 10 மணிக்கு என்னுடைய மொபைல் எண்.9025777888 லிருந்து அவரது மொபைல் எண்.7010598988க்கு அழைத்துக் கேட்டேன். அதற்கு JE முத்துராஜ் அவர்கள் செய்யப்பட்ட பணிகளுக்கு சரியாகத்தான் Bill போடப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே செட்டில் செய்யப்பட்ட Part billகள் போக Final bill ரூ.21 லட்சத்திற்கு அனுப்பப்பட்டு AEE அவர்கள் பார்த்தபின் EEக்கு சென்று விடும் என்று தெரிவித்தார். பின்னர் 19.02.2025 அன்று மாலை சுமார் 05.25 மணிக்கு AEE மேடம் எனக்கு மொபைலில் கூப்பிட்டு Final bill ஐ EEக்கு அனுப்பிவிட்டதாக தெரிவித்தார். உடனே நானும் EE பிரேம்குமார் அவர்களை அவரது மொபைல் எண்.8668157025க்கு என்னுடைய மொபைல் எண்.9025777888லிருந்து அழைத்தேன். அவர் எனது அழைப்பை எடுக்கவில்லை. பின்னர் அவரே சுமார் 05.36மணிக்கு எனது மொபைல் எண்ணுக்கு அழைத்தார். நான் Bill தொடர்பாக அவரிடம் விபரங்கள் கேட்டேன். அதற்கு அவர் நாளை அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு தெரிவித்தார். 20.02.2025 அன்று நான் எனது வீட்டிலிருந்து புறப்பட்டு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று EE பிரேம்குமார் அவர்களை பார்ப்பதற்காக காத்திருந்தேன். அங்கிருந்த பணியாளரான திரு.அருள்தாஸ் என்பவரை சந்தித்து Bill தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் EE டேபிளில் இருப்பதாக தெரிவித்தார். EE இன்னும் வரவில்லை என்றும் Bill amount எவ்வளவு என்று பார்க்கமுடியாது என்றும் தெரிவித்தார். பின்னர் நான் சுமார் 10.25 மணிக்கு என்னுடைய மொபைல் எண்.9025777888 லிருந்து EE பிரேம்குமார் அவர்களின் மொபைல் எண்.8668157025க்கு தொடர்பு கொண்டு பேசினேன். EE பிரேம்குமார் அவர்கள் என்னிடம் தற்போது அவர் அவசர வேலையாக சென்னைக்கு வந்துவிட்டதாகவும், 21.02.2025 அன்று தான் பழநி வருவதாகவும் அவருக்கு கொடுக்க வேண்டிய பணம் தொடர்பாக JE முத்துராஜ் அவர்களை பார்த்து பேசிக்கொள்ளுமாறும் பில் தொகை எவ்வளவு என்று கேட்டுக்கொள்ளுமாறும் தெரிவித்தார். நானும் EE பிரேம்குமார் சொன்னபடி JE முத்துராஜ் அவர்களை அவர் பணிபுரியும் Section-ல் சென்று சந்திப்பதற்காக சென்றேன். அங்கு அவர் இல்லாததால் என்னுடைய மொபைல்

எண்ணிலிருந்து JE முத்துராஜ் அவர்களின் மொபைல் எண்.701598988க்கு அழைத்து EE பிரேம்குமார் அவர்கள் பார்க்கச் சொன்னதாக தெரிவித்தேன். அதற்கு அவர் வெளியே இருப்பதாகவும் சிறிது நேரத்தில் வந்துவிடுவதாகவும் தெரிவித்தார். பின்னர் சுமார் 10.45 மணிக்கு JE முத்துராஜ் அவரது Sectionக்கு வந்துவிட்டார். அவர் வந்தபின் யாரோ ஒருவர் JE முத்துராஜ் அவர்களிடம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அதனால் நான் JE முத்துராஜ் அவர்களை உடனே பார்க்கமுடியவில்லை. பின்னர் சுமார் 11.45 மணியளவில் போனில் பேசுவதற்காக JE முத்துராஜ் அவர்கள் அங்கிருந்து எழுந்து சற்று தள்ளி வந்தார். உடனே நான் அவரிடம் சென்று EE பிரேம்குமார் அவர்கள் உங்களை பார்த்து Final Bill தொடர்பாக பேசுமாறு தெரிவித்தார் என்று கூறினேன். அதற்கு JE முத்துராஜ் அவர்கள் ஆமாம், Final Bill EE யிடம் உள்ளது. மொத்தபில் ரூ.21,81,000/- அதனை பாஸ் செய்ய வேண்டுமென்றால் ரூ.22,000/- லஞ்சமாக கேட்பார் என்று பில்லில் ஒரு சதவீதம் என்பதாக அவரது வலது கை ஆட்காட்டி விரலில் காண்பித்து கூறினார். நான் கொஞ்சம் குறைத்து ரூ.20,000/- கொடுத்துவிடலாமா என்று கேட்டேன். அதற்கு அவர் GST இல்லாமல் பில் ரூ.18,48,000/- என்றும் ரூ.18,000/- கொடுத்துவிடுங்கள் என்றார். அதற்கு நான் கொஞ்சம் குறைத்துக்கொள்ள முடியுமா என்று கேட்டேன். அதற்கு JE முத்துராஜ் அவர்கள் ரூ.500/- குறைத்தால் கூட EE ஒத்துக்கொள்ளமாட்டார் என்றார். அதற்கு நான் EE அவர்களிடம் பேசி குறைத்துக்கொள்ள பேசலாமா என்று கேட்டேன். அதற்கு JE முத்துராஜ் அவர்கள் Normal call-ல் பேச வேண்டாம் Whatsapp call-ல் பேசி கேட்டுக்கொள்ளுங்கள், மேலும் எனக்கு கொடுக்க வேண்டியதையும் கொடுத்துவிடுங்கள் என்றார். பின்னர் சுமார் 01.13 மணியளவில் நான் என்னுடைய Whatsapp எண்.9025777888லிருந்து EE பிரேம்குமார் அவர்களின் Whatsapp எண்.8668157025க்கு Whatsapp voice call செய்தேன். எனது Whatsapp voice call-ஐ எடுத்து பேசிய EE பிரேம்குமார் அவர்களிடம் JE முத்துராஜ் அவர்கள் பில் பாஸ் செய்ய GST இல்லாமல் ரூ.18,000/- கொடுக்குமாறு தெரிவித்த தகவலை கூறினேன். அதற்கு அவர் சரி சரிங்க என்று தெரிவித்தார். நான் EE பிரேம்குமார் அவர்களிடம் நாளை வெள்ளிக்கிழமை வந்து பார்க்கவா இல்லை திங்கள் கிழமை பார்க்கவா என்று கேட்டேன். அதற்கு அவர் நாளை காலை போன் பேசி விட்டு வந்து பார்க்குமாறு தெரிவித்தார். நானும் பின்னர் அங்கிருந்து கிளம்பினேன். பின்னர் நான் நினைத்து

பார்த்தபோது உதவி பொறியாளர் அறிவுறுத்தலின்படி செய்த பணியை காட்டிலும் அளவு புத்தகத்தில் குறைத்து எழுதி விட்டார்கள். அதனால் தொகையும் குறைந்துவிட்டது. மேலும் Final Bill பாஸ் செய்வதற்கு ஒரு சதவீதம் ரூ.18,000/- லஞ்சமாகவும் கேட்கிறார்களே என்று மனவருத்தப்பட்டேன். எனக்கு கொடுக்க வேண்டிய Final bill-ல் GST இல்லாமல் ஒரு சதவீதம் லஞ்சமாக ரூ.18,000/- கேட்கும் செயற்பொறியாளர் திரு.பிரேம்குமார் அவர்களுக்கு அவர் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.18,000/- லஞ்சமாக கேட்ட செயற்பொறியாளர் திரு.பிரேம்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்த நகல் மற்றும் Handing Over the site dated 10.05.2023-ம் இணைத்துள்ளேன். மேலும் செயற்பொறியாளர் திரு.பிரேம்குமார் அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.18,000/- கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xxxxx (செ.செந்தில்குமார், 21.02.2025)

Sir, Received the complaint on 21.02.2025 at 07.45 Hrs. A confidential verification was made on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.02/2025 u/s 7(a) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 21.02.2025 at 08.45 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 21.02.2025)

Original FIR along with the complaint of Tr.S.Senthilkumar, S/o.Sellamuthu, M/s Sony Constructions, 7/131A,Chinnagoundan Valasu, Vaaikalpalayam, Valliyarasal Village, Kangayam Taluk, Tirupur District are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

[signature] 21/2/25

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.